**<u>2020 ஆம் ஆண்டிற்கு கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பிப்பவர்களின் விசேட கவனத்திற்கு.</u>**

- 04.09.2020 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பாடநெறி இலக்கம் 49 மற்றும் 50 - வர்த்தகம் மற்றும் கணக்கீட்டுக் கல்வி (சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலம்) பாடநெறிக்காக விண்ணப்பிப்பதற்கு தேவையான தகைமைகள் கீழ் உள்ளவாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதை கவனத்திற்கொள்ளவும்.

**பாடநெறி இலக்கம் 49 - வர்த்தகம் மற்றும் கணக்கீட்டுக் கல்வி (சிங்களம்)**
**50 - வர்த்தகம் மற்றும் கணக்கீட்டுக் கல்வி (தமிழ்)**

4.28

4.28.1 2018 ஆம் வருடத்தில் நடைபெற்ற க.பொ.த (உ.தர) பரீட்சையில் கணக்கியல், வணிகக்கல்வி மற்றும் பொருளியல் எனும் வணிக பாடத்துறைக்குரிய பாடங்கள் மூன்று (03) அல்லது அவற்றில் இரண்டு (02) பாடங்களுடன் மூன்றாவது பாடமாக கீழ்க்குறிப்பிட்ட ஒரு பாடத்துடன் பாடங்கள் மூன்றில் (03) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

- வர்த்தக புள்ளிவிபரவியல், புவியியல், அரசியல் விஞ்ஞானம், வரலாறு, அளவையியலும் விஞ்ஞான முறையும், ஆங்கிலம், ஜேர்மன், பிரெஞ்சு, விவசாயம், இணைந்த கணிதம் அல்லது கணிதம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பம், பௌதிகவியல்

மற்றும்

4.28.2 3.0 இல் 3.3.1 உரிய தகைமைகளுடன் க.பொ.த (சா.த) பரீட்சையில் வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் அல்லது முயற்சியாண்மைக் கல்வி பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமை சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்.